(2021) 8 எஸ்சிஆர் 422

கிருஷ்ண கோபால் திவாரி மற்றும் ஒருவர்
எதிர்
இந்திய அரசு மற்றும் பிறர்
(உரிமையியல் மேல்முறையீடு எண் 4744/2021)
2021 ஆகஸ்ட் 13–ஆம் நாள்

(மாண்புமிகு நீதியரசர் திரு ஹேமந்த் குப்தா
மற்றும்
மாண்புமிகு நீதியரசர் திரு ஏ.எஸ். போபன்னா)

வருமான வரிச் சட்டம், 1961 , பிரிவு 10 (10) (ii) – விலக்கு கோல் இந்தியா லிமிடெட்டின் பணியாளர்கள் மேல்முறையீட்டாளர்கள் – இந்திய அரசின் 26.11.2008 தேதியிட்ட அலுவலக குறிப்பாணையின் வரையறைகளின்படி உயர்ந்தபட்ச பணிக் கொடையானது 01.01.2007 முதல் ரூபாய் 10 லட்சமாக உயர்த்தப்பட்டது – அலுவலக குறிப்பாணையின் வரையறைகளின்படி அத்தகைய பணிக்கொடை மேல்முறையீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டது – இருப்பினும் பின்னர் பணிக்கொடை வழங்கல் சட்டம் திருத்தப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் 17.5.2010 இல் பெறப்பட்டது – திருத்தப்பட்ட சட்டத்தின் வரையறைகளின்படி, திருத்தப்பட்ட சட்டம் அமுலுக்கு வரும் தேதியாக, இந்திய அரசால் 24.5.2010 இல் அறிவிக்கை வெளியிடப்பட்ட தேதியான மேற்படி தேதி இருக்கும் – திருத்தப்பட்ட சட்டம் நடைமுறைக்கு வரும் முன்னர் மேல்முறையீட்டாளர்களுக்குப் பணிக்கொடை வழங்கும் போது ஆரம்பத்திலேயே வரி பிடிக்கப்பட்டுவிட்டது என்பது தான் மேல்முறையீட்டாளர்களின்

வழக்கு – எனவே மேல்முறையீட்டாளர், துவங்கும் தேததியான 24.5.2010 ஐ எதிர்த்து ஆனால் அது 01.01.2007 முதல் நடைமுறைக்கு வர வேண்டும் என்று கூறி மற்றும் அதன் விளைவாக, பணிக்கொடை தொகையில் வரிக்கான பிடித்தம் செய்யப்படக்கூடாது – முடிவு, எந்த தீர்வம் அல்லது ஒப்பந்தம் நியமனதாரரின் கீழ் வரும் பணிக்கொடையிற் சிறந்த வரையறைகளின்படி பணியாளர் உரிமைக்கு பணிக்கொடைச் சட்டம் பிரிவு 4 உட்பிரிவு 5 பாதுகாப்பு தருகிறது – 26.11.2008 தேதியிட்ட அலுவலகக் குறிப்பாணையின் வலிமையில் மேல்முறையீட்டாளருக்கு வழங்கிய பணிக்கொடை அந்த உட்பிரிவின் கீழ் வரும் – இருப்பினும் , வருமான வரிச் சட்டத்தின் வரி விலக்கு யாதெனில், பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தொகையானது பணிக்கொடைச் சட்டம் பிரிவு 4 உட்பிரிவுகள் (2) மற்றும் (3)இன் வகைக்கூறுகளின்படி கணக்கிடப்பட்ட தொகையைவிட அதிக அளவு இருத்தல் கூடாது – பணிக்கொடைச் சட்டம், பணிக் கொடைத் தொகையாக திட்டமிட்ட தொகை ரூ.10 லட்சம் என்பது 24.05.2010 முதல் தான் – அத்தகைய பணிக்கொடை, , ஒரே ஒருமுறை வழங்கப்படும் தொகையாகும் – எனவே, ஒருமுறை வழங்கப்படுவதால், நிறுத்தும் நாள், சட்டத்திற்கானது எனச் சொல்லமுடியாது – எனவே, பணிக்கொடைச் சட்டத்திற்கான அத்தகைய திருத்தங்கள் முன்தேதியிட்டு கருதமுடியாது – வருமான வரிச் சட்டம் பிரிவு 10 (10)(ii)இன் குறிப்பிட்ட வரையறையின் காரணமாக அலுவலகக் குறிப்பாணையின் கீழ் மேல்முறையீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட பயனுக்கு விலக்க பெற

உரிமை இல்லை – பணிக்கொடை வழங்கல் (திருத்தம்) சட்டம், 2010 பிரிவு 1(2) – பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972 – பிரிவு 4 .

மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து நீதிமன்றம் தீர்மானித்ததாவது : மேற்படி சட்டத் திருத்தத்துக்கு பின் மட்டுமே துவங்கப்பெற்ற உயர்த்தப்பட்ட பணிக்கொடைப் பயன் பணியாளர்களுக்கு ஒருமுறை கிடைப்பதாக இருப்பதால், திருத்தப்பட்ட சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை செயல்படுத்த நிர்வாகத்தால் ஆரம்பிக்கப்படும் தேதி நிச்சயிக்கப்பட்டுள்ளதால் முன்தேதியிட்டு கருதமுடியாது, வருமான வரிச் சட்டம் பிரிவு 10(10)(ii)இன் குறிப்பிட்ட மொழியின் காரணமாக, அலுவலக குறிப்பாணையின் கீழ் மேல்முறையீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட பயனுக்கு விலக்குகான உரிமையில்லை. (பத்தி 17)

வருமான வரி ஆணையர் (மத்திய)–I, புது தில்லி எதிர் வாடிகா டவுன்ஷிப் பிரைவேட் லிமிடெட்(2015) 1 எஸ்சிசி 1: [2014] 12 எஸ்சிஆர் 1037; D. S. நகரா & பலர் எதிர் யூனியன் ஆஃப் இந்தியா(1983) 1 எஸ்சிசி 305 : [1983] 2 எஸ்சிஆர் 165; மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் சங்கம் மற்றும் அமைப்புகள் எதிர் ஆந்திரா மாநிலம்(1986) 3 எஸ்சிசி 501 : [1986] 3 எஸ்சிஆர் 383; யூனியன் ஆஃப் இந்தியா எதிர் அகில இந்திய சேவைகள் ஓய்வூதியதாரர்கள் சங்கம் & ஒருவர் (1988) 2 எஸ்சிசி 580 :

[1988] 2 எஸ்சிஆர் 697; ஸ்ரீ விஜயலட்சுமி ரைஸ் மில்ஸ், புதிய ஒப்பந்ததாரர்கள் நிறுவனம் எதிர் ஆந்திரப் பிரதேச மாநிலம் (1976) 3 எஸ்சிசி 37 :[1976] 3 எஸ்சிஆர் 775; ஓரியண்ட் பேப்பர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் &ஏன்ஆர். எதிர் ஒரிசா மாநிலம் & பலர் (1991) 1 சப்ளை. எஸ்சிசி 81 :[1990] 2 சப்ளை எஸ்சிஆர் 480; ஹிமாச்சல் சாலை போக்குவரத்து கழகம் & ஒருவர் எதிர் ஹிமாச்சல் ரோடு டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஓய்வுபெற்ற ஊழியர் சங்கம் (2021) 4 எஸ்சிசி 502 – குறித்துக்காட்டப்பட்டது.

[2014] 12 எஸ்சிஆர் 1037 குறித்துக்காட்டப்பட்டது... பத்தி 7

[1983] 2 எஸ்சிஆர் 165 குறிப்பிடப்பட்டது ... பத்தி 8

[1986] 3 எஸ்சிஆர் 383 குறிப்பிடப்பட்டது ... பத்தி 10

[1988] 2 எஸ்சிஆர் 697 குறிப்பிடப்பட்டது ... பத்தி 11

(1976) 3 எஸ்சிஆர் 775 குறிப்பிடப்பட்டது ... பத்தி 14

(1990) 2 சப்ளி எஸ்சிஆர் 480 குறிப்பிடப்பட்டது ... பத்தி 15

(2021) 4 எஸ்சிஆர் 502 குறிப்பிடப்பட்டது ... பத்தி 16

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு , உரிமையியல் மேல்முறையீடு எண் 4744/2021.

ராஞ்சியில் உள்ள ஜார்கண்ட் உயர்நீதிமன்றத்தின் நீ.பே. (வழக்கு) எண்.1729/2016 இல் 27.07.2016 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவில் இருந்து எழுகிறது.

<u>வழக்குரைஞர்கள்:</u>

அரிஜித் பிரசாத், மூத்த வழக்குரைஞர் சஞ்சய் குமார் விஷன்,
பன்வர் ஜாடோன், செல்வி. ஆதிரா ஏ. நாயர் .

..... மேல்முறையீட்டாளர்களுக்காக

விக்ரம்ஜித் பானர்ஜி, கூடுதல் அரசு வழக்குரைஞர்
M. P. குப்தா, பக்தி வர்தன் சிங், மோகன் பிரசாத் குப்தா,
P. S. சுதிர், திருமதி. பிரியங்கா தாஸ், அம்ரிஷ் குமார்,
வைபவ் அக்னிஹோத்ரி, செல்வி. சுப்ரியா ஜுனேஜா .

... எதிர் மேல்முறையீட்டாளர்களுக்காக

நீதிமன்றத்தின் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் திருஹேமந்த் குப்தா அவர்களால் வழங்கப்பட்டது.

1. பணிக் கொடை வழங்கல் (திருத்தம்) சட்டம், 2010–இன் அமுலினை 01.01.2007 முதல் விளம்பக் கோரிய மேல்முறையீட்டாளர்களின் கோரிக்கை மறுக்கப்பட்டு 27.07.2016 தேதியன்று ஜார்கண்ட் மாநில உயர் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர்கள் கோல் இந்தியா லிமிடெட்டின் பணியாளர்கள். மேல்முறையீட்டாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள கோல் இந்தியா லிமிடெட் போன் அத்தகைய மத்திய அரசு நிறுவனங்களின் செயல் அதிகாரிகள் மற்றும் ஒருங்கிணைக்கப்படாத மேற்பார்வையாளர்களுக்கு மத்திய அரசு பணிக்கொடை உயர்விற்கு ஒப்புதல் அளித்துள்ளது. 26.11.2008 தேதியிட்ட மத்திய அரசின் அலுவலக் குறிப்பாணையின் வரையறைகளின்படி 01.01.2007 முதல் பணிக்கொடையின் உச்சவரம்பு ரூ.10 லட்சமாக உயர்த்தப்பட்டது.

" 1(1). இந்தச் சட்டம், பணிக்கொடை வழங்கல் (திருத்தம்) சட்டம், 2010 என அழைக்கப்பெறும்.

(2) அரசிதழில் அறிவிக்கை மூலம் மத்திய அரசு நியமிக்கும் அத்தகைய தேதி முதல் அமலுக்கு வரும்.

2. பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972 பிரிவு 1–இல் உட்பிரிவு (3)இல், "மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்" என்ற வார்த்தைக்கு "ரூபாய் பத்து லட்சம்" என்று மாற்றப்படுகிறது."

4. திருத்தப்பட்ட சட்டத்தின் பிரிவு 1 உட்பிரிவு (2)இன் வரையறைகளின்படி, திருத்தப்பட்ட சட்டம், அமலுக்கு வரும் நாளாக நிருணயித்து, 24.5.2010 அன்று மத்திய அரசால் ஒரு அறிவிக்கை வெளியிட்டது.

5. திருத்தப்பட்ட சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பாக, மேல்முறையீட்டாளர்களுக்கு பணிக்கொடை வழங்கப்பட்டபோது, தோற்றுவாயிலேயே வரி பிடிக்கப்பட்டுவிட்டது என்பதுதான் மேல்முறையீட்டாளர்களின் குறையாகும். எனவே, மேல்முறையீட்டாளர்கள் அமல்படுத்தும் நாள் 24.5.2010 என்பதை

எதிர்த்துள்ளனர். ஆனால், அது 01.01.2007 முதல் அமலக்கு வரவேண்டும் என்று கூறியுள்ளனர் மற்றும் தொடர் விளைவாக பணிக்கொடைத் தொகை மீது வரிப்பிடித்தம் மேல்முறையீட்டாளர்களிடமிருந்து செய்தல்கூடாது.

6. மத்திய அரசு சட்டம் எண் 12/2018 இல் திருத்தம் செய்யப்படுவதற்கு முன்பாக இருந்தவாறு பணிக்கொடைச் சட்டத்தின் மற்றும் வருமான வரிச் சட்டம் 1961 ஆகியவற்றின் சில வகைக் கூறுகள் இங்கு குறிப்பிடவேண்டியதாகிறது:

"<u>பணிக் கொடைச் சட்டம், 1972</u>

4. பணிக்கொடை வழங்கல் – (1) ஐந்தாண்டுகளுக்கு குறையாமல் தொடர் பணியை அவர் முடித்த பிறகு, அவரது பணி முடிக்கப்படும்போது பணியாளருக்கு பணிக்கொடை வழங்கப்படவேண்டும்.

**** **** *** ****

இருப்பினும், பணியாளரின் பணி முடிப்பு இறப்பின் காரணமாக அல்லது இயலாமை காரணமாக இருக்கும்போது, ஐந்தாண்டு தொடர் பணி முடிப்பு அவசியமில்லை.

**** **** *** ****

3) பணியாளருக்கு வழங்கப்படவேண்டிய பணிக் கொடைத் தொகை ரூபாய் பத்த லட்சத்தைத் தாண்டக் கூடாது.

**** **** *** ****

5) எந்த தீர்வம் அல்லது ஒப்பந்தம் அல்லது நியமனம் வழங்குவோருடனான ஒப்பந்தம் ஆகியவற்றின் கீழ் நல்ல வரையறைகளின்படி பணிக் கொடையைப் பெறும் ஒரு

பணியாளரின் உரிமையை இந்தப் பிரிவில் உள்ள எதுவும் பாதிக்காது."

வருமான வரிச் சட்டம், 1961

10. மொத்த வருவாயில் சேர்க்கப்படாத வருமானங்கள் – எந்த ஒரு நபரின் முந்தைய ஆண்டுக்கான மொத்த வருமானம் கணக்கிட, கீழ்க்கண்ட வகைப்பாடுகளின் கீழ் வரும் எந்த வருமானமும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் –

1. **** **** *** ****

10. (ii) அந்த சட்டம் பிரிவு 4 உட்பிரிவுகள் (2) மற்றும் (3) வகைக்கூறுகளின்படி, கணக்கிடப்பட்ட தொகைக்கு கடக்கு அளவு பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972 (39/1972)இன் கீழ் பெறப்பட்ட எந்த பணிக்கொடையும்;

7. பணிக்கொடை சட்டத்திருத்தம் என்பது முற்போக்கான பயன் வழங்குவதற்கே என மேல்முறையீட்டாளர்களின் கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டார் வருமானவரி ஆணையாளர் (மத்திய I), புதுடெல்லி எதிர் வாட்டிகா டவுன்ஷிப் பிரைவேட் லிமிடெட் என்ற வழக்கினை சார்ந்து வைக்கப்பட்டது. அந்த சொல்லப்பட்ட பிரிவின் கீழ் விதிக்கப்படும் வரியானது மேற்கட்டணத்துடன் உயர்த்தப்படலாம் என வகைசெய்து வருமானவரிச் சட்டம் பிரிவு 113–இன் வரம்புரை புகுத்தப்பட்டது மேற்சொன்ன வழக்கு மற்றம் மேற்படி சட்ட பிரிவு 132–இன் கீழ் துவக்கப்பெற்ற ஆய்வுக்கு உள்ளான முந்தைய ஆண்டுக்கு சம்பந்தமான வரிமதிப்பீடு ஆண்டிற்கும் பொருந்தும். மேற்படி வகைக்கூறு இந்த நீதிமன்றம் முன்பு பரிசீலனைக்கு வந்துள்ளது. நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு முடிவு செய்துள்ளது.

"31. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், நபர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் சில பொறுப்பு அல்லது கடப்பாட்டை முன்தேதியிட்டு அளிக்கும் விதிமுறைக்கு முரணாக எதிர்காலத்தை நோக்கி அனுமானம் உள்ளது. தற்போதைய வழக்கில் சட்டத்தின் பிரிவு 113 இல் சேர்க்கப்பட்ட வரம்புரை கணக்கீடு செய்பவருக்கு பயனாக இருக்காது மாறாக, அந்த வகைக் கூறு கணக்கிடுவோருக்கு சுமையானது. எனவே, இது போன்ற வழக்கில், முன்தேதியிட்டு இயங்குவதற்கெதிராக சாதாரண உத்தேச விதியுடன், நாம் மேல் செல்லவேண்டும். முன்தேதியிட்டு இயங்குவதற்கெதிராக அத்தகைய அமைப்பு சட்டத்தின் வரையறைகளின்படி மிகத் தெளிவாக தோன்றினாலன்றி அல்லது தேவையான மற்றும் தனித்துவ தொடர்பு எழுந்தாலன்றி எந்த சட்டமும் முன்தேதியிட்டு இயங்குவதாகக் கருதமுடியாது என்பதே அடிப்படை சட்ட விதி ஆகும். உறுதியாக இயற்றப்பட்ட, அந்த விதியானது உத்தேசத்தைவிட அதிகமானதல்ல, எனவே, செல்வாக்குள்ள காரணிகளால் மாற்றப்படக்கூடும்.

8. நிறுத்தம் செய்யப்பட்ட நாளான 24.05.2010 இருவகையான பணியாளர்களை ஏற்படுத்தியுள்ளது, ஒன்று மேற்சொன்ன நாளுக்கு முன் ஓய்வு பெறும் வயதை அடைந்தவர்கள் மற்றும் இரண்டாவது 24.5.2010 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஓய்வு பெற்றவர்கள் என இந்த நீதிமன்றத்தின் டி.எஸ். நகாரா மற்றும் பலர் –எதிர்– ஒன்றிய அரசு என்ற வழக்கின் தீர்ப்புரையை மேற்கோள் காட்டி மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டார்.

அத்தகைய வகைப்பாடு சட்டத்திற்கெதிரானது மற்றும் தன்னிச்சையான தன்மை உடையது.

9. மாறாக, டி.எஸ். நகரா வழக்கு ஒவ்வொரு மாதமும் தொடர் பயன் பெறும் ஓய்வூதியதாரர்கள் பற்றி உள்ளதாகும் ஆனால், பணிக்கொடை என்பதை ஒருமுறை தருவதாகும் என்று ஒன்றியம் சார்பான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.விக்கிரம் ஜித் பானர்ஜி வாதிட்டார். நிறுத்தம் செய்யப்பட்ட நாளுக்குப் பின்னர் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியப் பயன் வழங்குமாறு உள்ள மற்றும் நிறுத்தம் செய்யப்பட்ட நாளுக்கு முன் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மறுக்கும் நிறுத்தும் நாள் தன்னிச்சையானது என இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. எனவே, பணிக்கொடைப் பயன் என்பது வேறு வழியில் ஓய்வூதியம் தரும் தொடர் உரிமையைவிட, நிற்கிறது. இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு முடிவு செய்துள்ளது :

> "38. குறிப்பிட்ட தேதிக்கு முன் ஓய்வுபெற்ற மற்றும் அதற்குப் பின் ஓய்வு பெற்றவர்களுக்கிடையே, ஓய்வூதியதாரர்களை நேரடியாக பிரிக்க குறிப்பிட்ட நாள் நிருணயிக்கப்பட காரணம் என்ன ? அது மேலும் வினா எழுப்புகிறது, ஏன் ஓய்வூதியத்திட்டம் முற்போக்காக அமைகிறது? முற்போக்கான ஓய்வூதியத்திட்டதுக்கான அவசியம் என்ன?
>
> ***** **** *****
>
> 42. ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதியப் பயன்களை பெருவதற்காக ஒரு பிரிவை அமைத்து, மாற்றியமைத்தல் காரணத்திற்கு சம்பந்தமில்லாத தகுதி விஷயத்தை நிர்ணப்பதில் தன்னிச்சையாக சீரான பிரிவினை பிரிக்க மேல்நோக்கி திருத்தம்

செய்ய அனுமதிக்கிறதா மற்றும் அத்தகைய வகைப்பாடு பகுத்தறிவு வாய்ந்த கொள்கையால் காணப்படுகிறதா ? என்பது மறுக்கமுடியாத உண்மையாக எங்களுக்குத் தோன்றுகிறது. இந்த வகைப்பாட்டின் அடிப்படையில், நன்கு அமைந்தவாறு சில விவேகமான கொள்கையின்படி உள்ளது மற்றும் இந்த விவேகமான கொள்கைகள், எட்டப்படவேண்டிய நோக்கத்திற்கு தொடர்புடையதாக இருக்கவேண்டும். ஓய்வூதியம் வழங்குவதில் ஆதாரமான நோக்கங்களை நாங்கள் ஏற்படுத்தியுள்ளோம். மாநிலம், ஓய்வூதியத் திட்டத்தை முற்போக்காக அமைக்க அவசியம் எனக் கருதினால், அந்த நாளுக்குப் பின்னர் ஓய்வுபெற்றவர்களுக்குமட்டும் இந்தப் பயன் வழங்கியும் அதே நேரத்தில் அந்த தேதிக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு அதனை மறுப்பதற்கும், அதன் பின்னால் எந்த விவேகமான கொள்கை இல்லை என நாங்கள் காண்கிறோம்...."

10. மேற்படி தீர்ப்புரை, மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் சங்கம் மற்றும் பிறர் எதிர் ஆந்திரப் பிரதேச மாநில அரசு வழக்கில் வெளியிடப்பட்ட தீர்ப்புரையில் பரிசீலிக்க எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதில், குறிப்பிடப்பட்ட ஓய்வுத்தேதியிலிருந்து பணிக்கொடை வழங்குவது என்பது அரசியலமைப்புக்கு விரோதமானதல்ல என முடிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு முடிவு செய்துள்ளது :

"2.... இதேபோன்று ஏற்கனவே நிலுவையில் இருந்ததன் அடிப்படையில் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட பணிக்கொடை அவர்கள் ஓய்வுபெறும் தேதியின் போது பெறப்பட்டது. ஓய்வு

பெற்ற நாளில் அவரால் பெறப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் ஓய்வு பெற்ற நாளில், தொகை தெளிவாகத் தெரியப்படுகிறது. அதன் அடிப்படையில் அவர்களுக்கு அது ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது. நடவடிக்கை முழுமையடைந்தது மற்றும் முடிவடைந்தது. இது தொடர்பாக வகைக்கூறு நேரிடையாக முன்தேதியிட்டு தரப்படும் என்றாலன்றி (கீழ்நோக்கி மாறுதல் சட்டப்படி அனுமதியில்லை) எதிர்காலத்தில் பின்னர் மேல்நோக்கிய அல்லது கீழ் நோக்கிய வகைமுறை ஏற்படும் சூழ்நிலைக்கு, மேல்நோக்கி அல்லது கீழ் நோக்கி மாற்றிட வாய்ப்பே இல்லை...."

11. மத்திய அரசு –எதிர்– ஆல் இந்தியா பென்ஷன்ஸ் அசாசியேசன் மற்றும் பலர் என்ற வழக்கில் வெளியிடப்பட்ட தீர்ப்பில் இதே கருத்து காணப்படுகிறது. அதில், ஓய்வூதியம் என்பது, ஓய்வூதியதாரர் உயிருடன் உள்ளவரை, காலமுறையாக வழங்கப்படுவது ஆனால் பணிக்கொடை என்பது சாதாரணமாக ஒருமுறை ஓய்வு பெறும்போது வழங்கப்படுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு முடிவு செய்துள்ளது:

"8. மேற்கூறியவற்றிலிருந்து, இந்த நீதிமன்றம் ஓய்வுபெற்றதன் பேரிலான ஓய்வூதியத்திற்கும், ஓய்வுபெற்றதன்பேரிலான பணிக்கொடைக்கும் இடையில் ஒரு வேறுபாட்டைச் செய்துள்ளது என்பது தெளிவாகிறது. ஓய்வூதியம் பெறுபவர் உயிருடன் இருக்கும் வரை ஓய்வூதியம் குறிப்பிட்ட கால இடைவெளியில் வழங்கப்படும் அதே வேளையில், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஒருமுறை மட்டுமே பணிக்கொடை வழங்கப்படும். ஆந்திரப்

பிரதேச மாநில அரசு ஓய்வூதியர் சங்க வழக்கு [(1986) 3 எஸ்சிசி 501 : 1986 எஸ்சிசி (L&S) 676] மற்றும் NL அபியங்கர் (1984) 3 எஸ்சிசி 125 : 1984 எஸ்சிசி (L&S)486 என்ற வழக்கில், நீதியரசர்கள் திரு. தக்கர் மற்றும் ரே ஆகியோரின் தீர்ப்புக்கு முரணான பார்வையை இந்த நீதிமன்றம் வேறு எந்த முடிவிலும் எடுக்கவில்லை. D.S. நாகரா [1983 எஸ்சிசி 305]: 1983 எஸ்சிசி [L&S] 145 [1983] 2 SCR 165 [1983 UPSC 263] என்ற வழக்கில் விதியின் பொருந்தக்கூடிய தன்மையைப் பொறுத்தவரை, ஓய்வு பெற்றவுடன் பணிக் கொடையாக அரசு வழங்க வேண்டும் என்ற வகையில் இந்த இரண்டு வழக்குகளிலும் கூறப்பட்ட கருத்துக்கள் எங்களை கட்டுப்படுத்துகின்றன. அத்தீர்முடிவுகளில் வெளிப்பட்டுள்ள கருத்துரைகளை நாங்கள் ஏற்கிறோம். 1–1–1973 க்கு முன்பு ஓய்வு பெற்றவர்கள் பணிக்கொடை மூலம் கூடுதல் தொகைக்கு தகுதியுடையவர்கள் என்று கேள்விக்குரிய அரசு அறிவிப்பானது வெளிப்படையாகவோ அல்லது தேவையான உட்கிடையானதாகவோ வழிகாட்டுகிறது என்பதும் வெளிப்படவில்லை. எனவே, 24–1–1975 தேதியிட்ட அரசு அறிவிப்பு எண். 33/12/73–AISC(ii) இன்படி இந்தியப் பணிகளில் இருந்து 1–1–1973 க்கு முன் ஓய்வு பெற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் பணிக்கொடை வழங்கப்பட வேண்டும் என்பதை தீர்ப்பாயம் உறுதி செய்வதில் தவறு செய்துள்ளது."

12. எந்த தீர்வம் அல்லது நியமனதாரருடனான ஒப்பந்தத்தின் கீழும் பணிக்கொடையை நல்ல வரையறைகளுடன் பணிக்கொடைச் சட்டம் பிரிவு 4 உட்பிரிவு 5 பாதுகாக்கிறது. 26.11.2008 தேதியிட்ட

குறிப்பாணையின் உறுதியூட்டலின்படி மேல்முறையீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டது அந்த உட்பிரிவுக்குள்வருகிறது.

13. இருப்பினும், பணிக்கொடைச் சட்டம் பிரிவு 4 உட்பிரிவுகள் (2) மற்றும் (3)இல் கண்ட வகைக் கூறுகளின்படி கணக்கிடப்பட்ட தொகையை மீறாமல், பணிக்கொடைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தொகை வருமானவரிச் சட்டத்திலிருந்து விலக்கு பெற்றதாகும். பணிக்கொடைச் சட்டம் 24.5.2010 முதல் மட்டுமே பணிக்கொடைத் தொகை ரூபாய் பத்து லட்சம் என திட்டமிட்டுள்ளது. அத்தகைய பணிக்கொடை ஒருமுறை மட்டுமே தரப்படவேண்டிய தொகையாகும். அது ஒருமுறை தரப்படுவதால், நிறுத்தப்பட்ட நாள் சட்டவிரோதம் எனக் கூறமுடியாது. எனவே, பணிக்கொடைச் சட்டத்தில் அத்தகைய திருத்தம் முன்னோக்கி உள்ளதாக கருதமுடியாது. எனவே, சட்டத்தின் வகைக் கூறுகள் முன்னோக்கி இருப்பதாகக் கூறமுடியாது.

14. திரு. விஜய லட்சுமி ரைஸ் மில்ஸ், நியூ கான்டிராக்டர்ஸ் மற்றம் பிறர் எதிர் ஆந்திரப் பிரதேச மாநில அரசு என்ற அறிவிக்கப்பட்ட வழக்கான இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புரையில், அரசின் வழங்கலுக்கான புதிய வீதம் 23.3.1964 முதல் அமலுக்கு வந்தது. ஏற்கெனவே வழங்கப்பட்ட அரசின் 23.3.1964 தேதியிட்ட பிந்தைய அறிவிக்கையில் அமைந்துள்ள பயன் கரும் வகைக் கூறின்படி பயன் பெறுமா என்ற வினா எழுந்துள்ளது. அந்த விற்பனை நாளில் நிலவிவந்த விலை மட்டுமே செலுத்தப்படவேண்டும் மற்றும் திருத்தம் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட உயர் விலை அல்ல என இந்த நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. அதன் முடிவு பின்வருமாறு :

"6. இந்த வழக்குகளில் மேற்சொன்ன விற்பனைகள் அரசி (ஆந்திரப்பிரதேஷ்) விலை கட்டுப்பாடு (3–வது திருத்தம்) 1964 நடைமுறைக்கு வருவதற்கு முன்பாக மேல்முறையீட்டாளர்களால் செய்யப்பட்டுள்ளதாலும் மற்றும் சொத்துக்கள் பொருளாக ஆந்திரப் பிரதேச அரசுக்கு அந்த நாட்களில் வழங்கப்பட்டுள்ளதாலும், விற்பனைகள் செய்யப்பட்ட நாட்களில் பெறப்பட்டவாறு மட்டுமே கட்டுப்பாடான விலை மேல்முறையீட்டாளர்களுக்குத் தரப்படவேண்டும் மற்றும் பின்னர் நடைமுறைக்கு வந்த உயர்ந்த விலை அல்ல."

15. அறிக்கையிடப்பட்ட மற்றொரு தீர்ப்பான ஓரியண்ட் பேப்பர் அன்ட் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் மற்றும் ஒருவர் எதிர் ஓரிசா மாநில அரசு மற்றும் பிலர் என்ற வழக்கில், சட்டத்தின் துவக்க நாளினை தேர்வு செய்ய அதிகார அமைப்புக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதால், அத்தகைய அதிகாரம் வழங்கல் அதிக அதிகாரம் வழங்கலாகக் கருதமுடியாது என முடிவு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றம் கீழ்கண்டவாறு முடிவு செய்துள்ளது :

" 29. அந்த பிரிவு அதிகாரம் வழங்கலாகக் காணப்பட்டாலும்கூட, சட்டமியற்றலுக்கு பின்புலத்தில் கொள்கைக்கு முழு விளைவு தருவதற்கு அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த நோக்கத்தை அடைவதற்கு குறிப்பிட்ட விஷயங்கள் மற்றும் சட்டமியற்றலில் திட்டமிடப்பட்ட சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு அதிகார அமைப்பு நேரம், இடம் மற்றும் வன உற்பத்திப் பொருள்கள் ஆகியவற்றை தேர்வு செய்ய அதிகாரம் பெற்றுள்ளது. அத்தகைய சட்டபூர்வ அதிகாரம் வழங்குவதில்

மிகையான அதிகார ஒப்படைப்பு ஏதுமில்லை. (கண்க, குவாலியர் ரேயான் சில்க் Mfg.(Wvg.) Co. Ltd. v. CST [(1974) 4 எஸ்சிசி 98 : 1974 எஸ்சிசி (வரி) 226: (1974) 2 எஸ்சிஆர் 879] ; ஹரிசங்கர் பக்லா எதிராக மாநில எம்.பி. [(1955)1 எஸ்சிஆர் 380, 388 : ஏஐஆர் 1954 எஸ்சி465]"

16. இறப்பு–பணிக்கொடை உயர்த்தப்பட்ட அளவு வழங்கலான குறித்த வழக்கான சமீபத்தில் அறிவிக்கப்பட்ட தீர்ப்பான ஹிமாசல் நோடு டிரான்ஸ்போர்ட் கார்ப்பெரேஷ் மற்றும் ஒருவர் –எதிர்– ஹிமாசல் நோட் டிரான்ஸ்போட் கார்ப்பொரேஷன் ஓய்வு பெற்ற பணியாளர்கள் சங்கம் வழக்கில், நிதிநெருக்கடியைக் கருத்திற்கொண்டு நிர்ணயிக்கப்பட்ட நிறுத்தும் நாள் தன்னிச்சையானது எனச் சொல்லமுடியாது. இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு முடிவு செய்துள்ளது.

"18. கட்–ஆஃப் தேதியை நிர்ணயம் செய்வதற்கான செல்லுபடி குறித்து இந்த நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்படவேண்டிய பல்வேறு வழக்குகள் இருந்தாலும், தற்போதைய வழக்கின் சங்கதிகளுடன் தொடர்புடைய தீர்முடிவுகளை நாங்கள் குறிப்பிடுகிறோம்.

பஞ்சாப் மாநிலம் –எதிர்– அமர்நாத் கோயல் [பஞ்சாப் மாநிலம் எதிர் அமர்நாத் கோயல், (2005) 6 எஸ்சிசி 754 : 2005 எஸ்சிசி (L&S) 910] என்ற வழக்கில், அதிகரித்துள்ள மரணத்தின் பலனை வழங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்–ஆஃப் தேதியின் செல்லுந்தன்மையை ஆய்வு செய்யும்போது ஓய்வுப் பணிக்கொடையுடன், அரசாங்கத்தால் கோரப்பட்ட நிதிக் கட்டுப்பாடு, கட்–ஆஃப் தேதியை நிர்ணயிப்பதற்கான சரியான

காரணம் என்றும், அத்தகைய நிர்ணயம் தன்னிச்சையானது, பகுத்தறிவற்றது அல்லது அரசியலமைப்பின் வகுமுறைக் கூறு 14 ம் பிரிவை மீறுவது அல்ல என்றும் இந்த நீதிமன்றம் கருதுகிறது....."

17. மேற்படி சட்டத் திருத்தத்துக்கு பின் மட்டுமே துவங்கப்பெற்ற உயர்த்தப்பட்ட பணிக்கொடைப் பயன் பணியாளர்களுக்கு ஒருமுறை கிடைப்பதாக இருப்பதால், திருத்தப்பட்ட சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை செயல்படுத்த நிர்வாகத்தால் ஆரம்பிக்கப்படும் தேதி நிச்சயிக்கப்பட்டுள்ளதால் முன்தேதியிட்டு கருதமுடியாது, வருமான வரிச் சட்டம் பிரிவு 10(10)(ii)இன் குறிப்பிட்ட மொழியின் காரணமாக, அலுவலக குறிப்பாணையின் கீழ் மேல்முறையீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட பயனுக்கு விலக்குகான உரிமையில்லை என நாங்கள் காண்கிறோம்.

18. தொடர் விளைவாக, உயர் நீதிமன்றம் வழங்கி உத்தரவில் நாங்கள் எந்தப் பிழையும் காணவில்லை. மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது.

அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."